PRANAV JOURNAL OF FINE ARTS

ISSN: 2582-9513

# பரதத்தில் குறியீடுகள் – ஓர் ஆய்வு

**பத்மினி. S & முனைவர் வானதி இரகுராமன்**

**இசை மற்றும் நுண்கலைத் துறை,**

**வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ், டெக்னாலகஜி &**

**அட்வான்ஸ்டு ஸ்டடீஸ் (VISTAS)**

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனை மற்றபிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்துவது உணர்வினை வெளிப்படுத்தும் அவனது குணமே ஆகும். மொழிகளற்ற நிலையில் ஆதிமனிதன் தம் உடல் அசைவுகளின் மூலமும், ஓசைகளின் மூலமும், கைகளால் சாடைகள் பல செய்தும் எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டான். அவ்வாறு எண்ணங்களையோ, செய்திகளையோ பரிமாறிக் கொள்வதற்கு உதவுபவையே குறியீடுகள். இத்தகு குறியீடுகள் நம் நாட்டின் தொன்மையான நிகழ்த்து கலையான பரதத்தின் முக்கிய அங்கமாக திகழ்கின்றது. ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம் மற்றும் சாத்விகம் என்று நான்கு வித அபிநயங்களை அங்கங்களாகக் கொண்டு நிகழ்த்தப்பெறும் பரதத்தில் மேற்குறிப்பிட்டுள்ளவை அனைத்துமே குறியீடுகளாக விளங்குவதனை இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறியலாம்.

**ஆய்வு நோக்கம்**

குறியீடுகள் எனப்படுபவை நம் அன்றாட வாழ்க்கை தொட்டு எல்லா களத்திலும் பெரும் பங்கு வகிக்கின்றன. இவை நம் நாட்டின் தொல்கலையான பரதத்தில் எத்தகையதொரு இன்றியமையா அங்கமாகத் திகழ்கின்றன என்பதனை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுச் சொல்:** குறியீடுகள், பரதம், கைச் செயற்பாடுகள்.

**முன்னுரை**

மொழியானது நம் மனத்தில் எழும் எண்ணங்களை பரிமாறுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு கருவியாக அமைகிறது. இன்றைய பரந்துபட்ட உலகில் ஏறக்குறைய ஏழாயிரத்திற்கும் மேலான மொழிகள் மனிதர்களால் உருவாக்கப்பட்டு அவைகளின் இலக்கணம், இலக்கியம் என்று மிளர்ந்திருப்பது நமக்கு பெருமிதத்தை அளிக்கின்றது. இத்தகைய மொழிகள் ஏதுமற்ற நிலையில் மனிதன் தம் எண்ணங்களை

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

பரிமாறுவதற்கு பயன்படுத்திய முறையே குறியீடுகள் ஆகும். மனத்தில் எழும் எண்ண அலைகளை ஒலியாகவோ, குகை ஓவியங்களாகவோ, சிற்ப வடிவங்களாகவோ, சைகை முறையிலோ மற்றவருடன் பரிமாறிக் கொண்டான் என்பதனை நாம் கேள்வியுறுகிறோம். அவன் ஒலிகளின் மூலம் வெளிப்படுத்தியதே ஓசையாகவும் அவற்றிலிருந்து மொழி உருவாக்கம் பெற்றது என்றும், அவ்வோசையே இசையாகவும் வடிவம் கொண்டது என்றும் நம் முன்னோர்களின் சொல்வழி நாம் அறியலாம். அவ்வாறே அவன் கைகளினால் செய்த சாடைகளிலிருந்தும், முகத்தில் ஏற்படும் உணர்ச்சி வெளிப்பாட்டிலிருந்தும் வெளிவந்ததே இன்றைய பல்வேறு பெயர்களால் அறியப்படுகின்ற ஆடல்கலையாகும்.

**ஆடல்கலையின் தொடக்க நிலை**

நாட்டின் பண்பாட்டினை அளக்கும் அளவுகோலாக அமையும் ஒரு மிகச் சிறந்த கருவியே அந்நாட்டின் கலாசாரம் ஆகும். கலாசாரம் என்பது நாட்டு மக்களினுடைய பழக்க வழக்கங்களிலிருந்து, கலைகளிலிருந்தும் ஏற்றம் பெறும். இன்றைய அளவில் செறிந்ததொரு கலாசாரத்தினையும், பழக்க வழக்கங்களையும் கொண்டு சிறந்து விளங்கும் நாடே நம் பாரதம். பாரதத்தின் பெருமை கூறும் பல கலைகளில் இன்றியமையாதது ஆடல்கலையாகும். நம் பாரத நாட்டில் பல்வேறு மாநிலங்களுக்கு உண்டான செவ்வியல் நடன முறைகளும், மக்களின் அன்றாட வாழ்க்கையினூடே பின்னிப் பிணைந்திருக்கும் நாட்டுப்புற ஆடல்கலைகளும் அநேகமானவை. எந்த ஒருர கொண்டாட்டமாயினும் ஆடல் நிகழ்ச்சி இடம்பெறாது அந்நிகழ்ச்சி முழுமை பெறாது என்றே கூறலாம். அத்தகைய ஆடல்கலையானது தொன்று தொட்டு நம் வாழ்க்கையின் அங்கமாய் இருந்து வருகிறது என்பதனை நம் தொன்மையான இலக்கண, இலக்கிய நூல்களின் வாயிலாகவும் நம் நாட்டின் கோயில்களில் இடம்பெற்றுள்ள சிற்பங்களின் வாயிலாகவும் நாம் அறிய முடிகிறது. செம்மொழியான தமிழின் சிறந்த பெரும் காப்பியமான சிலப்பதிகாரம் ஆடல்கலைக்கு உண்டான இலக்கணங்களை மிகவும் தெளிவுற மாதவியின் அரங்கேற்று காதையில் விரித்துரைக்கின்றது. இத்தகு ஆடலை நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்று மூன்று வகைகளாகப் பகுத்துரைக்கின்றது வடநூலான நாட்டிய சாத்திரம். இவை மூன்றும் ஆடலின் குறியீடுகளே எனலாம். மொழியில் அமையப்பெறும் எழுத்துக்களும் அவைகளைக் கொண்டு உருவாக்கம் பெறும் சொற்களும் எவ்வாறு குறியீட்டு வகையினை சார்ந்தோ அவ்வகையே ஆடல்கலை உருவாக்குவதற்கு உதவுகின்றன இம்மூன்றும். உடலின் அங்கங்களை பயன்படுத்தி ஒரு செய்தியையோ, ஒரு பொருளையோ அல்லது ஒரு கதையினையோ விளக்கும் இக்கலை.

ISSN: 2582-9513

**குறியீடுகள் என்பவை யாவை**

குறியீடுகள் எனப்படுபவன நம் அனைத்து அன்றாட செயல்பாடுகளில் பயன்படும் ஒரு இன்றியமையா ஒரு கூறு. மொழியற்ற தொடர்பே குறியீடுகளாகும். உதாரணத்திற்கு, போர்க்களத்தில் எதிரி மன்னன் போரினை தொடர விருப்பம் அற்ற நிலையில் வெள்ளை கொடியை காண்பித்தானேயானால் அது அவன் சமாதானத்திற்கு உடன்படுகிறான் என்ற குறியீடாகும். மண்டையோட்டின் கீழ் எலும்புகளை குறுக்காக இருக்கும்படி அமையும் வரைபடத்தை நாம் காணில் அதனை அபாயக்குறி என அறிந்து கொள்கிறோம். சாலைகளில் போக்குவரத்தினை கட்டுப்படுத்தும் சிவப்பு, மஞ்சள், பச்சை நிற விளக்குகள் முறையே நில், கவனி, செல் என்ற செயற்பாடுகளுக்குண்டான குறியீடுகள் என்று நாம் அறிந்ததே. இவ்வாறு கண்களில் காணப்படும் சின்னங்கள் முதல் நாட்டின் கொடியில் அமையப் பெறுகின்ற நிறங்கள் வரை அனைத்தும் ஒரு பொருளையோ அல்லது ஒரு விடயத்தையோ நமக்கு அறிவுறுத்தும் குறியீடுகளே என்று நாம் உணரலாம். குறியீடுகள் அமையப் பெறாத களம் இல்லை என்றே கூறலாம். போர்க்களம் தொட்டு காது கேளாதோர் வரை இன்றியமையாத ஒரு தகுதியினைப் பெற்றவை இக்குறியீடுகளாகும்.

**குறியீடுகளும் ஆடல்கலையும்**

**“ஆங்கிகம் புவனம் யஸ்ய வாசிகம் சர்வ வாங்மயம்**

**ஆஹார்யம் சந்த்ர தாராதி தம் நும சாத்வீகம் சிவம்”**

என்ற நாட்டிய சாத்திரத்தின் வரிகளின் வழி இறைவனான ஈசன் இப்புவனத்தை அங்கங்களாகவும் உலகின் அனைத்து மொழிகளையும் தம் சொற்களாகவும் சந்திர நட்சத்திரங்களை போல் அணியும் ஆபரணங்களாகவும் கொண்டு ஆடுவதாக அறிகிறோம். உடலின் அங்கங்களை பயன்படுத்தியே ஆடல் நிகழ்த்தப்படுகிறது. நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்ற மூன்றாக வகுக்கப்படும் ஆடல்கலையில் அமையப் பெறும் அத்துணையும் குறியீடுகளே ஆகும்.

உடல் பயன்பாட்டினை மூன்று வகையாகப் பிரித்துரைக்கின்றன நாட்டிய இலக்கண நூல்கள். அவை அங்கம், பிரதியாங்கம், உபாங்கம் என்பவை. இவற்றில் அங்கமானது சிரம், கைகள், மார்பு, இடை, பக்கங்கள், பாதம் என்று ஆறு வகைப்படும் என்றும், பிரதியாங்கம் எனப்படுவது தோள்கள், மணிக்கட்டுகள், கரம், முதுகு, வயிறு, தொடை, முழந்தாள், கழுத்து, பின்பாகம் என்பவை என்றும், உபாங்கம் எனப்படுபவை முகத்திலுள்ள புருவம், இமை, கண்பாவை, மூக்கு, கன்னம், சுவாசம், உதடு, வாய், பற்கள், நாக்கு, முகவாய், முகம்,

ISSN: 2582-9513

PRANAV JOURNAL OF FINE ARTS

உடலின் மற்ற பகுதிகளான குதிகால், பாதவிரல்கள், கை விரல்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன நம் நாட்டிய நூல்கள்.

தொலைதூரத்தில் இருப்பவரிடம் செய்தியினை பரிமாறுவதற்கு தாம் கைகளினால் சாடை செய்வது நம் பழக்கத்தில் உள்ளதே. இதே முறைதான் நாட்டியத்திலும் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டியத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்வது கைகளின் செயற்பாடுகள். இவற்றை ஒற்றைக் கை, இரட்டைக் கை என்ற பொருளில் சிலப்பதிகாரம் பிண்டி, பிணையல் என்றும், கைகளினை ஹஸ்தம் என்று கூறும் நாட்டிய சாத்திரம் போன்ற வடமொழி நூல்கள் அஸம்யுத ஹஸ்தம், ஸம்யுத ஹஸ்தம் என்று இருவகைப்படும் என்றும் பகர்கின்றன. கைகளின் செயல்பாடுகள் ஆடல் கலையின் ஒரு முக்கிய கூறு என்பதனை,

**யதோ ஹஸ்தஸ் ததோ த்ருஷ்டி:**
**யதோ த்ருஷ்டி ததோ மன:**
**யதோ மனஸ் ததோ பாவோ:**
**யதோ பாவஸ் ததோ ரஸ:**

என்ற அபிநய தர்ப்பணத்தின் வரிகளின் மூலம் கைகளின் செயற்பாடுகளை கண்கள் தொடரும் நிலையில் பாவம் அமையும் என்றும், அந்த பாவத்திலிருந்து சுவையானது வெளிப்படும் என்றும் விளக்கியுரைக்கிறது. கைகளின் வகைகளை மிகச் சீரிய முறையில் விளக்கும் இந்நூல்கள் அவற்றின் பயன்பாடுகளையும் செவ்வனே விளக்குகின்றன. ஒற்றைக் கை, இரட்டைக் கைகள் மட்டுமல்லாது நிருத்தத்தின் தேவைகளுக்குண்டான கைகள் என்றும், உறவுகளை குறிப்பதற்குண்டான கைகள் என்றும், நான்கு வர்ணத்தாரை குறிக்கும் கைகள் என்றும், பருவ நிலைகளைக் குறிக்கும் கைகள் என்றும் பலவிதமான கைகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் விளக்குகின்றன. இவை எவ்வாறு குறியீடுகளாகச் செயல்படுகின்றன என்று நாம் காணும் வகையில் உதாரணத்திற்கு முகுளக்கையினை எடுத்துக் கொள்வோம், விரல்களை நுனியில் குவித்து பிடிக்கும் போது அது மலரானது மொட்டாக இருப்பதை உணர்த்தும் குறியீடாகும். அதே கையினை முகுளத்திலிருந்து அலபதுமக்கையாக விரிக்கோமேயானால் அம்மலர் மலர்வதனை குறிப்பதாகும். பதாகக் கையின் பயன்பாட்டினை நோக்கும்போது வெட்டுவதற்கு இக்கையினை பயன்படுத்துவதோடும் அருளுவதற்கும் நாம் பயன்படுத்துகிறோம். கைகளை சிரத்திற்கு மேலே தூக்கிப் பிடிக்கும்போது மட்டுமே அது அருளலை குறிக்கும். இவ்வாறாக கைகள் ஒரு பொருளை குறிக்கவோ அல்லது ஒரு கருத்தினை வெளிப்படுத்தவோ பயன்படுத்தும்போது

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

மற்ற அங்கம், பிரதியாங்கம், உபாங்கம் அனைத்தும் அதே பொருளை அல்லது கருத்தினை குறிக்கும் வகையில் அமையும்போது மட்டுமே குறிப்பு தெளிவுற அமையும்.

அங்கங்களில் சிர அசைவுகளின் பேதங்களை நோக்கும்போது சிரத்தினை சமமாக நேராக வைப்பது மனதின் உறுதி தன்மையினையோ, மனம் சமநிலையில் இருக்கும்போது அல்லது ஒரு சிலையினை குறிக்கும்போதோ பயன்படுத்தப்பெறும். தலையினை ஆலோலிதமாக சுழற்றுவது அதிக தூக்கத்தினையோ அல்லது மயக்கமுறுதல் போன்ற செய்கையினை குறிக்கவோ பயன்படுத்துகின்றோம் என்பதனை அறியலாம். நாட்டிய இலக்கண நூல்களின் வழி நாம் அறியக்கூடிய மேலும் சில குறியீடுகளான மண்டலம், ஸ்தானம் என்பவை. இவை நின்ற நிலை, அமர்ந்த நிலை, கிடந்த நிலை என்ற நிலைப்பாடுகளைக் கொண்டு குறிப்புணர்த்தும் வகைகளாகும். பாத பேதங்கள் முதற்கொண்டு கிரீவ பேதம் எனப்படும் கழுத்தினை அசைக்கும் முறை வரையிலும், விழிகளின் அசைவுகளையும் உள்ளடக்கி நிகழ்த்தும் போது மட்டுமே ஒரு பொருளையோ, ஒரு கருத்தையோ நாம் அபிநயமாக சரிவர வெளிப்படுத்த இயலும். பறவையினத்தை சார்ந்த மயிலை நாம் குறிக்கும்போது கைகளை மயூரம் என்ற ஒற்றைக் கையினை உபயோகித்து கழுத்தினை பிரகம்பிதமாக முன்னும் பின்னும் அசைத்து பாதத்தை குவித்து குஞ்சிதமாக வைத்து நடக்க வேண்டும்.

ஆங்கிக அபிநயத்தினை தொடர்ந்து வருவது வாசிக அபிநயமாகும். வாசிகம் எனப்படுவது வாக்கு, சொல் போன்றவை. நாட்டியத்திற்கு உண்டான பாடல் அது அமையப் பெறும் ராகம், தாளம் போன்றவைகளைக் குறிக்கும். ஒரு கருத்திற்கு ஏற்ற பாடல் வரிகளைக் கொண்டும், அதே கருத்திற்குரிய பாவத்தினை வெளிக் கொணருமாறு அமைகின்ற ராகம் மற்றும் தாளம் இவைகளும் குறியீடுகளே. ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம் மற்றும் சாத்விகம் எனப்படும் நான்கு வகை அபிநயங்களுமே குறியீடுகளாக செயல்படுகின்றன என்று கூறலாம். இதில் மூன்றாவதாக அமையப்பெறும் ஆஹார்ய அபிநயம் எனப்படுவது கலைஞர்கள் அணிந்து கொள்ளும் ஆடை ஆபரணங்களின் மூலம் கருத்தினை வெளிப்படுத்தக்கூடிய ஒருவகை குறியீடாகும். இவ்வகை பெரும்பான்மையாக நாட்டிய நாடகங்களில் பயன்படுத்தப்படுவதை நாம் காணலாம். பொதுவாக நடன நிகழ்ச்சிகளில் கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட வகையில் ஆடை, ஆபரண அலங்காரம் செய்து கொள்வது வழக்கம். அதுவே ஒரு நாட்டிய நாடக நிகழ்ச்சியில் கதாபாத்திரங்களுக்கு ஏற்றவாறு ஆடை ஆபரணம் அணிந்து அப்பாத்திரத்தின் உருவத்தை பார்வையாளர்களின் கண்முன் கொண்டு வரக்கூடிய தன்மையுடையது இவ்வாஹார்ய அபிநயமாகும். ஒரு மன்னனாக வேடம் பூணுபவர் தலையில் கிரீடம் அணிந்து கொள்ளுதல் பார்த்த

மாத்திரத்தில் அப்பாத்திரத்தின் தன்மையை உணர்த்துகின்ற குறியீடாகும். திருமாலாக வேடம் பூணுபவர் நீல நிறத்தில் அரிதாரம் பூசிக் கொள்வதும், நெற்றியில் நாமம் அணிந்து கொள்வதும் அவ்வேடத்தின் குறியீடாகும்.

நான்காவதாக அமைந்திருக்கும் சாத்விக அபிநயமானது மனதில் எழும் உணர்ச்சிகளை சிறிதும் குறையாது அவ்வண்ணமே இருத்தி கண்களிலும், முகத்திலும் காண்பிக்கக்கூடிய அபிநயத்திற்கு உண்டான பாவத்தை சேர்க்கக் கூடிய இன்றியமையாத குறியீடாகும். ரௌத்திர ரஸத்தை காண்பிக்க முற்படும் பொழுது கண்களை விரித்தது மட்டுமல்லாது மனத்திலும் அதே அளவு கோபத்தை உணர்ந்தால் தான் ரௌத்திரத்தை பார்வையாளர் உணர்ந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்த இயலும்.

நடனத்தின் வழி ஒரு கதை அல்லது ஒரு கருத்தினை நிகழ்த்தும்போது நாம் அக்காட்சியில் உயர்திணையாகிய ஆண், பெண், விலங்கு, பறவை, புழு, மரம், இலை, பூ, காய், கனி போன்ற பலவற்றிற்கும் உரித்தான கைச் செய்கைகளை குறியீடாக பயன்படுத்துவது மட்டுமின்றி அவர்களுக்கிடையே நிகழ்பவைகளையும் அக்காட்சியில் சேர்க்க வேண்டும். அந்நிகழ்வுகளுக்கு உதவக்கூடிய அஃறிணைப் பொருள்களையும் குறியீடாக நாம் அக்காட்சியினை அமைக்க ஏதுவாக இடம்பெறச் செய்தல் அவசியம். உதாரணத்திற்கு, தலைவியானவள் தன்னை மலர் மாலைகளால் அலங்காரம் செய்து கொள்வதற்கு முனையும் போது அவள் அருகிலுள்ள மரத்தினில் மலர்ந்திருக்கும் மலரைக் காண்பித்து, அம்மலருக்குண்டான நறுமணத்தை நுகர்வது போல் பாவனை செய்து, பின் அவற்றை பூக்கூடையில் பறித்து வைப்பது போல் காட்சியமைத்தல் வேண்டும். இந்நிகழ்வினில் கைச் செய்கைகளின் மூலம் ஒரு உயர்திணையாகிய மரத்தினையும், அதன் மலர்களையும் குறியீடாக காண்பித்து, அதில் வெளிப்படும் நறுமணத்தினை சாத்விக பாவமாக நுகரும் தருணத்தில் கிடைக்கப் பெறும் அனுபவத்தை முகத்தில் காண்பித்து, அஃறிணைப் பொருளான பூக்கூடையினை கைகளின் மூலம் குறியீடாக பிடித்து மலரினைப் பறிக்கும் செயலினை செய்வதாக காண்பித்தல் வேண்டும். இந்நிகழ்வின் காட்சியமைப்புக்கு உதவுகின்ற அனைத்துமே குறியீடுகளாக செயல்படுகின்றன என்பதனை நாம் அறியலாம்.

**முடிவுரை**

மேலே தொகுத்து வழங்கப்பட்டுள்ள செய்திகளிலிருந்து நாம் கைச் செயற்பாடுகளை போன்ற மற்ற அங்கம், பிரதியாங்கம், உபாங்கம் என்ற ஆங்கிக அபிநயம் எவ்வாறு கருத்தினை வெளிப்படுத்தும் குறியீடுகளாக பயன்படுத்தப் படுகின்றனவோ அதேபோன்று

ISSN: 2582-9513

மற்றைய மூன்று வகை அபிநயங்களான வாசிக, ஆஹார்ய மற்றும் சாத்விக அபிநயங்களும் பரதக் கலையின் குறியீடுகளாகவே அமைகின்றன என்பதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

**துணைநூற் பட்டியல்**

*Natyasastra - Text with introduction, English translation and Indices ( volume 2 ) - முனைவர் என். பி. உன்னி- Special revised edition:2014

*The Mirror of gesture Being the Abhinaya Darpana of Nandiesvara- Translated into English - ஆனந்தா குமாரசுவாமி மற்றும் கோபால கிருஷ்ணய்யா டுக்கிராலா- Cambridge Harvard University Press 1971

*பரதக்கலைக்கோட்பாடு – முனைவர். பத்மாசுப்ரமணியம்- வானதி பதிப்பகம்

*தமிழர் நடன வரலாறு – புலவர். முனைவர் சே.இரகுராமன்- நந்தினி பதிப்பகம் 2006